எனது இல: ஈரி/ஈம்/55
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்,
த.பெ.இல.17,
மஹரகம.
2018.01.19 திகதி

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்,
சகல பிரிவுப் பொறுப்பு பதவி நிலை அதிகாரிகள்,
மாகாணப் பணிப்பாளர்கள் மற்றும்,
மாவட்ட பொறுப்பு உதவிப் பணிப்பாளர்களுக்கு.

**தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்காக முன்வைக்கப்படுகின்ற சுயஓய்வு இழப்பீடு முறைமை**

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் சுயஓய்வு முறைமையை செயற்படுத்துவதற்காக தேசிய கொள்கை மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சு கவனம் செலுத்தி உள்ளது.

2. அதற்கமைய நகல் வரைபு முன்மொழிவுகளை இத்துடன் முன்வைக்கின்றேன். அதற்கமைய இவ்வாறான முறைமைகளின் ஊடாக ஓய்வு பெறுவதற்கு விரும்புகின்ற உத்தியோகத்தர்கள் சுய விருப்பத்துடன் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்தை பூரணப்படுத்தி 2018.01.30ம் திகதிக்கு முன் நிறுவனப் பிரிவுக்கு முன்வைக்க நடவடிக்கை எடுக்குமாறு இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சட்டத்தரணி டப்.ஜி.எஸ்.எறந்திக
பணிப்பாளர் நாயகம்/தலைவர்
**தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்**

பிரதி:-
01. பணிப்பாளர்கள் - தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் -தயவான அறிதல் பொருட்டு
02. பிரதான உள்ளக கணக்காய்வாளர்- தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்- தயவான அறிதல் பொருட்டு
03. பிரதிப் பணிப்பாளர்கள் -தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் -தயவான அறிதல் பொருட்டு

## வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான முன்மொழியும் சுய விருப்பு ஓய்வு இழப்பீட்டு முறைமை தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

**அறிமுகம்**

1979ஆண்டின் 69 இலக்க தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாப்பிற்கமைய நிறுவப்பட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோளை அடைவதற்காக பணிக்கப்பட்டுள்ள தலையாய கடமையாவது இலங்கையின் இளைஞர்களின் முழு ஆளுமை விருத்தியினை உறுதிப்படுத்துவதற்கு ஏற்ற வகையிலான அவர்களின் சுய ஆளுமை விருத்தியாகும். தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக தேசிய அபிவிருத்தி ஆலோசனை முறைமையில் இளைஞர்களின் பங்களிப்பினை ஏற்படுத்தல், இளைஞர்களுக்கிடையே உடல், உள மற்றும் விளையாட்டு விருத்தியினை மேம்படுத்தல், இளைஞர் அமைப்புகளை மற்றும் இளைஞர்களுக்கான சேவைகளை வழங்குவதற்காக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு பணிக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றும்போது மன்றத்தின் வெளிக்கள உத்தியோகத்தர்களின் அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கு பெரும்பாலும் அழுத்தம் செலுத்துகின்றது. விசேடமாக இளைஞர்களின் சிந்தனை எதிர்பார்ப்புகள் மற்றும் தேவைகளை இனங்கண்டு இளைஞர்களுடன் ஒத்துழைப்பு மற்றும் செயற்பாட்டுத்திறனுடன் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய உத்தியோகத்தர் பிரிவினரை வெளிக்கள கடமை நடவடிக்கைக்காக ஈடுபடுத்திக் கொள்ளல் அத்தியாவசியமான விடயமொன்றாகும்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு பணிக்கப்பட்டுள்ள கடமைகளுக்கிடையில் கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் இளைஞர் கழகங்களை அமைத்தல், அவற்றை அமைப்பதற்கான திட்டங்களை தயாரித்து வழிகாட்டல், இளைஞர் கூட்டுறவினை கிராம மட்டத்தில் வியாபித்து, வருமானத்தை தேடும் மார்க்கமாக சிறுவியாபார கிராமிய அபிவிருத்தி செயல்திட்ட நடவடிக்கைகளுக்கு ஆர்வமுள்ள இளைஞர்களை இனங்கண்டு அவர்களுக்கு பயிற்சியினை வழங்கல் மற்றும் உதவி சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக ஒத்துழைத்தல் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கை, விளையாட்டு, கலாசாரம் மற்றும் கிராமிய அபிவிருத்தி செயல்திட்ட மேம்பாட்டு நடவடிக்கைகளை கிராமிய மட்டத்தில் செயல்படுத்துகின்ற விடயங்கள் கிராமிய மற்றும் பிரதேச மட்டத்தில் செயற்படுத்துவதற்காக விசேட கவனத்தை செலுத்த வேண்டியுள்ளது. அதற்கமைய இவ் உத்தியோகத்தர்கள் அடிக்கடி வெளிக்களத்திற்கு பயணத்தினை மேற்கொள்ளல் மற்றும் இளைஞர்களுடன் வெளிக்களத்தில் ஒன்றுபடுதல் கட்டாயமானதாகும். இவ்விடயத்தை கருத்தில் கொண்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் தமது கடமை நடவடிக்கைகளை வினைத்திறன் மற்றும் உற்பத்தி திறனுடன் நிறைவேற்றுவதற்காக அடிக்கடி இளைஞர்களுடன் ஒன்றிணைந்து வெளிக்கள நடவடிக்கையில் செயற்படல் அத்தியாவசிமாகும். அதற்கமைய தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடாக இளைஞர்களுக்கு சேவையினை வழங்குவதை வெற்றிகரமாக்கவேண்டும் என்றால் அதிகாரிகளின் திறமை, அறிவு, எண்ணப்பாங்கு, ஆற்றல் மற்றும் அனுபவம் மிகவும் முக்கியமானதாகும். இங்கு இளைஞர்கள் மற்றும் வெளிக்கள உத்தியோத்தர்களுக்கிடையே வயது வித்தியாசம் மிக முக்கிய தீர்மானமிக்க காரணி என அவதானிக்கப்பட்டுள்ளது.

விசேடமாக தற்போது சேவையாற்றுகின்ற உதவி இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள், இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள், மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள், மற்றும் உதவிப் பணிப்பாளர்கள் தொடர்பாக கேட்டறிந்து பார்க்கும்போது பின்வரும் விடயங்கள் அவதானிக்க கூடியதாக உள்ளது.

1. தற்போது சேவை புரிகின்ற உதவி இளைஞர் சேவை அதிகாரிகள் 320 பேரில் 45 வயதிற்கு மேற்பட்ட அதிகாரிகள் 16 பேர் மட்டுமே உள்ளனர்.

தற்போது செயற்படுத்தப்படுகின்ற மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு புறம்பாக தேசிய அபிவிருத்தி முன்னெடுப்பின்போது தேசிய இளைஞர் சேவை மன்றத்திற்கு பணிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் எங்கள் கவனத்தை செலுத்த வேண்டி உள்ளது. அரசினால் புதிய நாட்டினை உருவாக்க தேசிய அபிவிருத்தி செயற்பாட்டின் கீழ் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு விசேட பொறுப்பினை வழங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. விசேடமாக பத்து லட்சம் தொழில் வாய்ப்பினை உருவாக்கும் நிகழ்ச்சியின் கீழ் இளைஞர்களுக்கான வியாபார துறைக்கு ஈடுபடுத்தல், இளைஞர் வியாபார குழுவினை ஒழுங்கமைத்து தேசிய சந்தைக்கு மற்றும் ஏற்றுமதி சந்தையின் கேள்விக்கு அமைய வியாபாரம் மற்றும் உப ஒப்பந்தம் ஆரம்பித்தல் போன்ற இளைஞர்களுக்கு வருமான மார்க்கங்களை ஏற்படுத்தல் மற்றும் தேசிய பொருளாதாரத்திற்கு இளைஞர்களின் செயற்பாட்டு பங்களிப்பினை வழங்குதல் போன்ற துறையில் வெளிக்களத்தில் செயற்படுத்தப்பட வேண்டிய நிகழ்ச்சித் திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளது. இதற்காக இளைஞர்களின் விருப்பு வெறுப்புக்கள் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புக்களை இனங்கண்டு அவ்விடயங்களை வெற்றிகரமாக்கி கொள்வதற்காக இளைஞர்களுடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு ஆற்றல் இருத்தல் வேண்டும். இங்கு வெளிக்கள உத்தியோகத்தர்களின் எண்ணப்பாங்கு உடல் மற்றும் உள தகுதிகள் தீர்மானமிக்க காரணிகளாகும்.

I. தற்போது சேவை புரிகின்ற உதவி இளைஞர் சேவை அதிகாரிகள் 320 பேரில் 45 வயதிற்கு மேற்பட்ட அதிகாரிகள் 16 பேர் மட்டுமே உள்ளனர்

II. தற்போது சேவை புரிகின்ற இளைஞர் சேவை அதிகாரிகள் 613 பேரில் 30 பேர் 55 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள் தொகுதியில் அடங்குவர். அதே போல் 45 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதெல்லைக்கு உட்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை 252 ஆகும். அதற்கமைய இளைஞர் மற்றும் இளைஞர் அமைப்புகளுடன் வெளிக்களத்தில் நேரடியாக மற்றும் செயலாற்றலுடன் செயற்படுகின்ற இளைஞர் சேவை உத்தியோகத்தர்களில் அதிகமானோர் 45 வயதிற்கு மேற்பட்ட தொகுதிக்கு உட்பட்டவர்கள் ஆவர். வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் இளைஞர்களிடையே காணப்படுகின்ற இந்த வயது வித்தியாசம் இளைஞர்களின் தேவை மற்றும் எண்ணப்பாங்கினை அறிந்து வெளிக்களத்தில் கடமைகளை வெற்றிகரமாக மற்றும் செயல்திறனாக நிறைவேற்றுவதற்கு தடையாக உள்ளது என்பது தெரியவந்துள்ளது.

III. வெளிக்கள உத்தியோகத்தர்களின் மேற்பார்வை நடவடிக்கை தொடர்பாக பொறுப்பு வழங்கப்பட்டுள்ள மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள் 33 பேரில் 31 பேர் 45 வயதிற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் ஆவர்.

IV. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட காரியாலயங்களில் மற்றும் பிரதான காரியாலயத்தில் வெளிக்கள நடவடிக்கைகள் திட்டமிட்டு செயற்படுத்தல் மற்றும் அந்த நிகழ்ச்சித்திட்டம் வெளிக்கள மட்டத்தில் மேற்பார்வை செய்யும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ள உதவிப் பணிப்பாளர்கள் 48 பேரில் 43 பேர் 45 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஆவர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வெளிக்கள உத்தியோகத்தர்களின் வயதெல்லைக்கேற்ப நடைமுறையில் உள்ள தன்மை தொடர்பாக அறிந்து கொள்ளப்பட்ட பிரச்சினைகளுக்கு புறம்பாக இந்த உத்தியோகத்தர்களின் சேவைக்காலம் மற்றும் இந்தக் காலத்தினுள் பெற்றுக் கொள்ளப்பட்ட பதவியுயர்வு சந்தர்ப்பங்கள் கருத்தில் கொண்டு பார்க்கையில் சில பிரச்சினைகளை இனங்காண முடிகிறது.

1. 1990ம் ஆண்டிற்கு முன் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் உதவி இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அதிகாரிகளில் 43 பேர் தற்போதும் இளைஞர் சேவை அதிகாரிகளாகவே பதவியில் சேவையாற்றுகின்றனர். அதற்கமைய 26 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலங்கள் பதவியுயர்வு பெற சந்தர்ப்பம் இல்லாது இளைஞர் சேவை உத்தியோகத்தர் பதவியில் வெளிக்கள நடவடிக்கையில் ஈடுபட நேர்ந்துள்ளது. இந்த நிலைமை மேலும் சிக்கல் நிலைமையாக உள்ளது. 2012ம் வருடம் வரை செயற்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு

அல்லது பதவியுயர்வு திட்டத்திற்கமைய இளைஞர் சேவை அதிகாரி தரம் 1ல் மூன்று வருடம் சேவைக்காலம் உள்ள அதிகாரிகளுக்கு அதற்கடுத்த பதவியுயர்வான மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி பதவிக்கு விண்ணப்பிக்க சந்தர்ப்பம் இருந்தது. புதிய ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டம் செயற்படுத்தப்பட்ட 2012.10.22ம் திகதி வரை மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி பதவிக்கு விண்ணப்பித்த தகுதி உடைய உத்தியோகத்தர்கள் 257 பேர் சேவையில் ஈடுபட்டிருந்தனர். அந்த உத்தியோகத்தர்கள் தற்போதும் இளைஞர் சேவை அதிகாரி பதவிகளில் சேவையாற்றுகின்றனர். பதவியுயர்வு பெற சந்தர்ப்பம் கிடைக்காதபடியினால் அதே பதவியில் நீண்டகாலம் கடமையாற்ற வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு நேர்ந்ததுள்ளமை மிகவும் பொருத்தமற்ற தன்மையாகும். பதவியுயர்வு வழங்குவதற்கு வெற்றிடம் இல்லாதமையும் ஒருசில சந்தர்ப்பங்களில் பதவியுயர்வு வழங்கும் முறையற்ற நிலைமை என்பது இந்நிலைமைக்கு ஏதுவாக உள்ளது. அதன் மூலம் உத்தியோகத்தாகள் அதைரியம் அடைதல், வினைத்தறன் குறைவடைதல், கடமையாற்றும்போது எதிர்பார்க்கும் வகையில் வெளிக்கள நடவடிக்கைக்கான ஆர்வம் காட்டாமை போன்ற பொருத்தமற்ற நிலைமைகள் ஏற்பட காரணமாயின. அதன் மூலம் உத்தியோகத்தர்கள் மனச்சங்கடத்திற்கு உள்ளாதல் தவிர்க்க முடியாத விடயமு் ஒன்றாகும். தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் எதிர்பார்த்தபடி இளைஞர்களுக்கு வினைத்திறன் மற்றும் உயர் மட்டத்திலான சேவையினை வழங்குதல் பொருட்டு பாதகமான அழுத்தங்கள் ஏற்பட்டமை எமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட விடயத்தில் ஒன்றாகும். பொருத்தமான இழப்பீட்டு முறைமையின் கீழ் ஓய்வு பெறும் சந்தர்ப்பத்தினை பெற்றுத் தரும்படி இந்த உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத்தின் ஊடாக விண்ணப்பம் முன்வைக்கப்பட்டுள்ளமை எமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த விடயங்களை கவனத்தில் கொள்ளும்போது தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிக்கள மேற்பார்வை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பதவி நிலை அதிகாரிகளிடமிருந்து எதிர்பார்த்த வகையில் மன்றத்திற்கு பணிக்கப்பட்டுள்ள விடயங்கள் உயர் மட்டத்தில் நிறைவேற்றுவதற்கு மிக முக்கியமான நடவடிக்கைகள் என கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவுகள் முன் வைப்பதற்கு எதிர்பார்க்கின்றது.

A. சுய விருப்பத்துடன் சேவையில் ஓய்வு பெறும் திட்டம் ஒன்றை செயற்படுத்துதல்

B. தொடர்ந்தும் கடமையாற்ற விரும்புகின்றவர்களின் தகமை அனுபவம் மற்றும் திறமைகள் உள்ள உத்தியோகத்தர்கள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் இருந்து விடுவிக்கப்பட்டு வேறு தகுதியான அரச துறையின் பதவிகளுக்கு இணைக்கப்படுதல்.

இந்த கருத்திட்ட முறைமையை செயற்படுத்துவதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை கருத்தில் கொள்ளுதல் ஏற்றதென முன்மொழிகின்றேன்.

**A. சுய விருப்பின் பேரில் கடமையில் ஓய்வு பெறும் உத்தியோகத்தருக்கான ஆலோசனை முறைமை**

**A.1** கிடைக்க வேண்டிய இழப்பீட்டு திட்ட நிபந்தனைகளின் பிரகாரம் இழப்பீட்டு நிதி உரிய உத்தியோகத்தருக்கு கொடுப்பனவு செய்ய வேண்டும்.

**A.2** அமைச்சரவையில் அனுமதி பெற்ற பின் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இழப்பீடு வழங்குவது கருத்தில் கொள்ளல் பொருத்தமாகும்.

**A.2.1** சுய விருப்புடன் ஓய்வு பெறும் முறைமையின் கீழ் விண்ணப்பம் செய்ய தகுதி உடையவர்கள்

**I.** தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவி இளைஞர் சேவை அதிகாரிகள், இளைஞர் சேவை அதிகாரிகள், மாவட்ட இளைஞர் சேவை அதிகாரிகள், மற்றும் உதவிப் பணிப்பாளர்கள் மட்டும். இதன் கீழ் 45 வயதிற்கு மேற்பட்ட 60 வயதை பூரணமடையாத அதிகாரிகள்

**II.** மேற்குறித்த சேவைப் பிரிவுகளுக்குரிய உத்தியோகத்தர்களுக்காக இழப்பீடு முறைமை கீழ்க் குறித்தவாறு

a) முன்சேவை - ஒவ்வொரு 12 மாத சேவைக் காலத்திற்காக 04 மாத சம்பளம்.

b) விடுபடும்சேவை - ஒவ்வொரு 12 மாத சேவைக் காலத்திற்காக 06 மாத சம்பளம்

**A.3** இழப்பீடு வழங்கும்போது உரித்துடையதான நிபந்தனைகள்

**a)** இழப்பீடு வழங்கும் நடவடிக்கைக்கு ஏற்றவாறு கண்டிப்பாக ஓய்வு பெறும் வயதெல்லை 60 ஆக கவனத்தில் கொள்ளப்படும்.

**b)** கண்டிப்பாக ஓய்வு பெறும் சந்தர்ப்பத்தில் எதிர்வரும் அடிப்படை சம்பளத்தினை அடிப்படையாகக் கொண்டு இழப்பீடு கணிப்பிடப்படும். வேறு கொடுப்பனவுகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

**c)** இழப்பீட்டிற்கு மேலதிகமாக சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய வழங்கப்படவேண்டிய சகல நியதிகள் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

**d)** ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட வண்ணம் இருப்பின் மற்றும் ஏதேனும் மத்தியஸ்தர் சபையின் கீழ் தமது தொழில் நிலைமை தொடர்பில் விசாரிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் இத்திட்டத்தின் கீழ் தகமை பெற மாட்டார்கள்.

**e)** நிறுவனத்திற்கு அறவிட வேண்டி உள்ள நிதி உத்தியோகத்தருக்கு உரித்துடைய இழப்பீட்டுத் தொகையில் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**f)** வெளிநாட்டிற்கு தொழில் நிமிர்த்தம் சென்ற, இந்நாட்டில் நிலைநிறுத்தப்பட்டுள்ள வெளிநாட்டு நிறுவனங்களில் அல்லது கல்வி நடவடிக்கைகளுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட சம்பளமற்ற லீவு, வைத்திய தேவையின் நிமிர்த்தம் பெற்றுக் கொள்ளப்பட்ட விசேட லீவு, இரண்டாம் நபர் அடிப்படையில் வேறு நிறுவனங்களிற்கு அல்லது விடுவிக்கப்பட்ட அடிப்படையில் வேறு அரச நிறுவனங்களின் சேவைக்காலம் இழப்பீட்டு கொடுப்பனவு பணிகளுக்காக கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

**g)** இவ் அனுகூலத்தினை பெற்று சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்பவர்கள் எக்காரணத்தைக் கொண்டும். அரச கூட்டுத்தாபனங்கள், நியதிகள் சபைகள், மற்றும் அரசுடமை கம்பனிகள் உட்பட அரசுத் துறையில் சேவைக்காக மீண்டும் இணைவதற்கு உரித்துடைமை கிடையாது.

**A.4** இவ் இழப்பீட்டு திட்டம் முன்மொழியப்படுவது தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் எதிர்பார்க்கும் வகையில் வயதெல்லை 45க்கு மேற்பட்ட வெளிக்களங்களில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் சுய விருப்பின் அடிப்படையில் ஓய்வு பெறுவதற்காக ஆர்வம் ஊட்டுவதற்காகும். ஓய்வு பெறுதலின் மூலம் வெற்றிடமாகும் பதவிகளுக்கு இளைஞர் நடவடிக்கை தொடர்பிலான அனுபவம் கொண்ட தலைமைத்துவ ஆற்றல் உடைய இளம் உத்தியோகத்தர் பிரிவினர்களை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதெனவும் அதனூடாக இளைஞர்களுக்காக சேவை வழங்குவதற்கு மற்றும் இளைஞர் அபிவிருத்தி.

**B.** சுய விருப்பின் பேரில் ஓய்வு பெறுவதற்கு விரும்பாத உத்தியோகத்தர்கள் வேறு நிறுவனத்திற்கு முழு நேர கடமைக்காக விடுவிக்கப்படல்.

**B.1** தொடர்ந்தும் சேவையில் ஈடுபட விரும்புகின்ற, தகமை, அனுபவம் மற்றும் திறமை உள்ள அதிகாரிகள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் இருந்து விடுவிக்கப்பட்டு அந்த அதிகாரிகளின் அனுபவம் மற்றும் தேர்ச்சியினை கருத்தில் கொண்டு வேறு அரச நிறுவனங்களில் கடமைக்காக விடுவித்தல் இந்த முறைமையின் கீழ் எதிர்பார்க்கப்படுகிறது. பிரதேச செயலகம், கல்வி அலுவலகம், மற்றும் வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளை நிறைவேற்றுகின்ற காரியாலயங்களின் வேலைத்திட்டங்களை திட்டமிடுதல். முன்னேற்ற நிர்வாகம் மற்றும் மதிப்பீடு ஆகிய விடயங்களுக்காக இந்த அதிகாரிகளை ஈடுபடுத்திக் கொள்ள முடியும். விசேடமாக பாடசாலையில் இருந்து விலகிய இளைஞர்களை உற்பத்தி திறன் விடயங்களுக்காக ஈடுபடுத்தல், தொழில் வழிகாட்டல் மற்றும் தெளிவூட்டல் செய்தல் ஆகிய வேலைத்திட்டம் மற்றும் வளர்ந்தோர் கல்வி, சிரேஸ்ட பிரஜைகளுக்கான பிரயோசனமான வேலைத்திட்டங்களை செயற்படுத்தல். இளைஞர் அமைப்பு கிராமியப் பிரிவில் அபிவிருத்தி நடவடிக்கைக்கு ஒழுங்கமைப்பு ஊடாக ஈடுபடுத்தல் போன்ற வேலைத்திட்டங்களுக்காக இந்த உத்தியோகத்தர்களின் அனுபவம் மற்றும் தேர்ச்சியினை பயன்மிகு வகையில் ஈடுபடுத்திக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது.

**B.2 மாற்று தொழிலுக்காக இணைக்கப்படும்போது உரித்தாகும் நிபந்தனைகள்.**

- **a)** இந்த அதிகாரிகளின் வயது 45க்கு மேற்பட்டதாகவும் 60க்கு குறைவாகவும் இருத்தல் வேண்டும்.
- **b)** அதிகாரிகள் கடமை புரிகின்ற பதவி வெற்றிடம் ஏற்படும் வகையில முழுநேரத்திற்கும் விடுவிக்கப்படுதல்.
- **c)** இந்த உத்தியோகத்தர்களின் சம்பளம் அவர்கள் சேவையில் இணைக்கப்பட்டுள்ள அரச நிறுவனத்தின் ஊடாக செலுத்தப்படுதல்.
- **d)** இந்த உத்தியோகத்தர்களுக்கு இழப்பீட்டு நிதி வழங்கப்படமாட்டாது. சேவையை பெற்றுக் கொள்கின்ற நிறுவனத்தின் ஊடாக தற்போது அதிகாரி பெறுகின்ற சம்பளத்தில் எவ்வித குறையுமின்றி வழங்கப்படும்.
- **e)** இந்த அதிகாரியின் அல்லது உத்தியோகத்தரின் தகமை அனுபவம் மற்றும் திறமைகளை கருத்தில் கொண்டு தகுதியான பதவிக்கு இணைத்தல். உத்தியோகத்தரின் விருப்பம் மற்றும் நிறுவனத்தின் தேவை அடிப்படையில் உத்தியோகத்தரை இணைத்தல் முறைமை ஒன்று தயாரிக்கப்படும்.

**C.** சுய விருப்பில் ஓய்வு பெறுதல் மற்றும் வேறு நிறுவனத்திற்கு முழு நேரத்திற்கு விடுவிக்கப்படுகின்ற உத்தியோகத்தரின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஏற்படுகின்ற வெற்றிடத்திற்காக புதிய உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்துக் கொள்வதற்கான அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ள வேண்டி உள்ளது.

உத்தேச செயற்திட்ட முறைமைகளை செயற்படுத்துவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளுதல் தேவை என்ற கருத்தினை முன்வைக்க விரும்புகின்றேன்.

மேற்குறித்த ஆலோசனைகள் வெளிக்கள அதிகாரிகளுக்காக மட்டுமே முன்வைக்கப்பட்டுள்ளதோடு அதற்கு மேலதிமாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏனைய பதவிகளில் உள்ள அதிகாரிகள் மற்றும் பணித்தொகுதியினர் இந்த சந்தர்ப்பத்தை பெற்றுக் கொள்ள எதிர்பார்த்துள்ளனர். அதற்கமைய அவர்களுக்கும் இந்த சந்தர்ப்பத்தினை பெற்றுக் கொடுத்தல் தகுதியென முன்மொழிகின்றேன்.

பணிப்பாளர் நாயகம்
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

## இழப்பீடு பெற்றுக் கொள்வதற்கான சுயவிருப்பு ஓய்வு பெறும் விண்ணப்பப்படிவம்

01. பெயர் :-..............................................................................................................................

02. ஊழியர் சேமலாப நிதி இலக்கம்:-.......................................................................................

03. பதவி மற்றும் தரம் :-..........................................................................................................

04. தற்போது பெறப்படும் மாதாந்த வேதனம் (கொடுப்பனவு தவிர்ந்த):-.................................................

05. பிறந்த திகதி :-.....................................................................................................................

06. சேவையில் இணைந்த திகதி - அமையம் :-.................................................................................
நிரந்தரம் :-.................................................................................

07. சேவைக் காலம் - அமையம் :-.................................................................................
நிரந்தரம் :-.................................................................................

08. மீதமாகவுள்ள சேவைக் காலம் :- .......................................................................................

09. இம் மன்றத்தில் தற்போது கடன் பெறப்பட்டுள்ளதா என்பது பற்றி :-

..............................................................................................................................................

..............................................................................................................................................

10. இழப்பீடு முறைமையின் கீழ் தாங்கள் எதிர்பார்க்கும் இழப்பீட்டுத் தொகை(ஏறத்தாழ) :-

..............................................................................................................................................

விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன். இழப்பீட்டு முறையின் கீழ் இழப்பீட்டு தொகையை பெற்று சுய விருப்பத்துடன் ஓய்வு பெற விரும்புகின்றேன் என்பதை இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

| | |
|---|---|
| ................................................. | ............................................. |
| திகதி | கையொப்பம் |